முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.623/2020

தேதி : 18–09–2025

(பி.வா.சா.1) – திரு.பங்காரு என்ற சண்முகம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 3 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>3 முதல் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் 1, 2 பிரதிவாதிகளை மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றும், மற்ற பிரதிவாதிகளை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து துர்கையம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை. 11.12.2003 ல் வாதி வழக்கு சொத்தை மேற்படி துர்கையம்மாளிடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான், அந்த சமயத்தில் துர்கையம்மாளுக்கு அச்சொத்தில் உரிமையில்லை. வழக்கு சொத்திற்கு வாதி பட்டா பெற்று வீட்டுவரி செலுத்திவந்தார் என்றால் ஆமாம், ஆனால் எல்லாம் ரத்தானது. அ.வ.எண்.58/2006 வாதி தாக்கல் செய்து சமரசமாக முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, விசாரணைக்கு பின்னர் தள்ளுபடியானது. சண்முகம் என்பவர் துர்கையம்மாளுக்கு மோசடியாக ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும், அதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். போலியான ஆவணங்களை ரத்து செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுத்தேனா என்றால் பத்திரத்தை ரத்து செய்வதற்கு சார்பதிவாளரிடம் மனு கொடுத்திருந்தேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1. 1ம் பிரதிவாதிக்கு நான் அதிகார முகவர் என்றால் சரிதான். அந்த பவர் பத்திரத்தை 25.09.2002 ல் 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பவர் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பவர் ஏஜெண்ட் என்ற முறையில் மேற்படி சொத்திற்காக தான் வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். பவர் ஏஜெண்ட் என்ற நிலையில் தான் 1ம் பிரதிவாதிக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

வழக்கு சொத்தில் எனக்கு நேரடியான பாத்தியமோ அல்லது அனுபவமோ இல்லை என்றால் பாத்தியம் இல்லை என்பது சரிதான், ஆனால் சொத்தை நான் தான் அனுபவித்து வந்தேன். நான் அனுபவித்தாக உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண். 386/1 முதல் 386/6 வரையிலான சொத்துக்கள் ஜெகநாதனுக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். சர்வே எண். 386/3ல் உள்ள சொத்த 3 செண்ட்டா அல்லது 36 செண்ட்டா என்றால் ஞாபகமில்லை. சர்வே எண். 386/1 முதல் 386/6 ல் கட்டடப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 62 செண்ட் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 1 ஏக்கர் 62 செண்ட்டை ஜெகநாதன் பொன்னுச்சாமிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

2. ஜெகநாதனுக்கு 1 ஏக்கர் 31 செண்ட்டில் உரிமையிருந்த நிலையில் 1 ஏக்கர் 62 செண்ட்டை பொன்னுச்சாமிக்கு கிரையம் செய்ய அவருக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. ஏழுமலையும் ஜெகநாதனும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். ஏழுமலையும் பொன்னுச்சாமியும் அவர்களுடைய நிலங்களை பரிவர்த்தனை (Exchange) செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். பொன்னுச்சாமி ஜெகநாதனிடம் கிரையம் பெற்ற 1 ஏக்கர் 62 செண்ட்டில் மேல்புறம் 78 செண்ட்டை ஏழுமலைக்கு பரிவர்த்தனை செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அதேபோல் ஏழுமலை சர்வே எண். 386/7ற்கு கட்டப்பட்ட 1 ஏக்கர் 53 செண்ட்டில் பிரிவினை இல்லாத 76-1/2 செண்ட்டை பொன்னுச்சாமி பரிவர்த்தனை செய்துகொடுத்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்து சர்வே எண். 386/1 முதல் 386/6ல் 1 ஏக்கர் 62 செண்ட்டில் உள்ளது என்றால் 1 ஏக்கர் 62 செண்ட்டில் மேல்புறம் 78 ல் உள்ளது.

3. பிளாட் எண். 58, 59ல் தான் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய காலிமனை உள்ளது என்றால் சரிதான். நான்குமால் குறிப்பிட்டு தான் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். நான்குமால் விபரப்படி 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தின் கிழப்பக்கம் சர்வே எண். 386/6 கட்டுப்பட்ட நிலமும், தெற்குபக்கம் 393/2ஏ நிலம் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நான்குமாலின்படி அவர் வாங்கிய சொத்து சர்வே எண். 386/6 மற்றும் சர்வே எண். 393/2ஏல் இல்லை என்று சொன்னால் சரியல்ல, சர்வே எண்.

386/6ல் வரும். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.6 புலவரைபடம் சர்வே எண். 393க்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6ன்படி சர்வே எண். 393க்கு வடபுறம் சர்வே எண். 386 உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 பட்டா நாகாத்தாள் பெயரிலுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் அடங்கியுள்ள சொத்து சர்வே எண். 393/2ஏ1பி என்றால் சரிதான். இந்த பட்டாவை ரத்து செய்யக்கோரி RDOவில் மனு செய்திருந்தேன் என்றால் இல்லை, நாகாத்தாள் பெயரில் சர்வே எண். 386 பட்டாவை ரத்து செய்ய தான் மனு செய்தேன். பட்டாவை ரத்து செய்த உத்தரவு தான் பி.வா.சா.ஆ.16 என்றால் சரிதான்.

4. அந்த உத்தரவில் நாகாத்தாள் என்பவர் அந்த சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். துர்கையம்மாள் வீட்டிற்கு கிழக்கு பக்கம் நாகாத்தாள் வீடு உள்ளது என்றால் சரிதான், ஆனால் அது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம். துர்கையம்மாள் கிரைய ஆவணத்தின்படி சர்வே எண். 386/1 முதல் 386/6, 386J, 393/2ஏ, 393/2பிக்குட்ப்பட்ட 2 ஏக்கர் 42 செண்ட் மனையிடங்களாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பிளாட் எண். 35ல் தான் துர்கையம்மாள் 1955 ச.அடி கிரையம் பெற்று கிழ்புறம் சதுரடி 872ஐ நாகாத்தாளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 393/2ஏ, 393/2பில் தான் நாகாத்தாளின் சொத்து உள்ளது என்றால் சரிதான், ஆனால் அவர்களுக்கு அந்த சொத்தில் உரிமையில்லை. நாகாத்தாளின் சொத்து சர்வே எண். 386/6க்குட்பட்டு வரவில்லை என்றால் சரிதான், ஆனால் அப்படி கிரைய பத்திரத்தில் உள்ளதுபோல் காட்டுகிறார்கள். பி.வா.சா.ஆ.16ஐ பொறுத்து தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை, ஆனால் மற்றொரு வழக்கை தாக்கல் செய்துள்ளார், நான் அதில் கட்சி செய்தேன். எனக்கு கிரையம் கொடுத்த பவர் ஏஜெண்ட் ரத்தினத்தின் மீதோ அல்லது ஏழுமலை மீதோ வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை., ஆனால் அவர்கள் தாக்கல் செய்திருந்தார்கள்.

5. 1ம் பிரதிவாதி கிரைய பெற்ற சொத்து பிளாட் எண். 58, 59 வருகின்றது என்பதை காட்ட அனுமதிக்கப்பட்ட வரைபடம் மற்றும் உத்தரவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அப்படி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிளாட் எண். 58, 59க்கு அரசால்

அனுமதி வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன், நகல் என்பதால் குறியீடு செய்யவில்லை, சான்றாவணம் பெற முயற்சித்தபோது 20 ஆண்டுகள் ஆனது அதனால் இல்லை என்று கூறிவிட்டார்கள்.

6. தாவா சொத்து வாதிக்கு மட்டும தான் பாத்தியம் என்றும், அ தில் அவர் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு உரிமையோ அனுபவமோ இல்லை என்றால் உரிமை உள்ளது, அனுபவம் இல்லை, வாதிகள் அவ்விடத்தில் உட்கார்ந்து கொண்டு மிரட்டுகிறார்கள், அதனால் 1ம் பிரதிவாதியால் அனுபவம் செய்யமுடியவில்லை. 1ம் பிரதிவாதி தவறான சொத்தை கிரையம் பெற்றுக்கொண்டு வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்கிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.